DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 108/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கார்த்திக் |
| Father / Husband Name | பாலா |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.05.2026

**குறுக்கு விசாரணை:**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். நான் மேற்படி தொழிலை கமிஷனுக்கு செய்கிறேன். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவரது அண்ணன் சதீஷ் என்பவர் மூலம் தெரியும். அன்புச்செல்வன் என்ற ரஜினி எனக்கும் சதீஷ்-கும் பொதுவான நண்பர் என்றால் சரியல்ல, அன்புச்செல்வனை எனக்கு தெரியாது. என்னிடம் பணம் வாங்கும்போது எதிரி எங்கு குடியிருந்தார் என்றால் பருத்திபட்டில் இருப்பதாக சொன்னார். நான் மகாபலிபுரத்தில் உள்ள A2B Hotelல் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன். இந்த விவரத்தை என்னுடைய புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 10 லட்சம் ரூபாய் பணம் கொடுக்கும்போது எதிரிகளிடம் இருந்து என்னென்ன ஆவணங்கள் வாங்கினேன் என்றால் காசோலையும் ஆண்டிமான்ட் பத்திரம் (கடனுறுதி சீட்டு) வாங்கினேன். அந்த காசோலை தான் இந்த வழக்கின் காசோலை என்றால் சரிதான்.

2. பணம் கொடுக்கும்போது எதிரி காசோலையும் ஆண்டிமான்ட் பத்திரம் (கடன் உறுதி சீட்டு) கொடுத்தார் என என்னுடைய அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. எதிரி வியாபாரம் செய்கிறார் என்றால் சரிதான், என்ன வியாபாரம் செய்கிறார் என்றால் அவரும் அவரது அண்ணனுடன் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக அவரது அண்ணன் சதீஷ் சொன்னார். பணம் வாங்கும்போது சதீஷ் என்பவரும் எதிரியுடன் வந்தார் என்றும் இருவரும் சேர்ந்துதான் பணம் வாங்கினார்கள் என்றும் என்னுடைய அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்தேன், என்னுடைய வழக்கறிஞர் அதை தாக்கல் செய்தாரா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை.

3. எனக்கு தமிழ் படிக்க தெரியும், என்னுடைய முதல் விசாரணையை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். என்னுடைய முதல் விசாரணையில் பணம் கொடுத்து 5 மாதம் கழித்துதான் எதிரி காசோலை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எவ்வளவு ரூபாய் வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் நான் வட்டிக்காக பணம் கொடுக்கவில்லை. என்னுடைய வருட வருமானம் எவ்வளவு என்றால் ரூ.5 முதல் 6 லட்சம். நான் என்னுடைய வருமானத்தை வங்கியில் வைத்திருப்பேனா என்றால் Gpay பயன்படுத்துவதற்கு மட்டும் 10 ஆயிரம் 20 ஆயிரம் வைத்திருப்பேன். எனக்கு மாதம் எவ்வளவு செலவாகும் என்றால் எனக்கு திருமணம் ஆகவில்லை, நானும் என் அம்மாவும் மட்டும் தான், மாதம் ரூ.7000/- செலவாகும். ரூ.10 லட்சம் சேர்ப்பதற்கு எனக்கு குறைந்தது 2 ஆண்டுகள் ஆகும் என்றால் சரிதான்.

4. நான் எதிரிக்கு கொடுத்த 10 லட்சத்தில் 4 லட்சம் ரொக்கமாக வைத்திருந்தேன், 6 லட்சம் ரூபாய் கூவத்தூர் இந்தியன் வங்கியில் நகை அடகு வைத்தேன். எந்த தேதியில் நகை அடகு வைத்தேன் என்றால் எதிரி என்னிடம் பணம் கேட்ட பிறகு அடகு வைத்து கொடுத்தேன். நான் அடகு வைத்த நகையை மீட்டுவிட்டேனா என்றால் நான் மீட்கவில்லை, அது என் சகோதரியின் நகை, அதை அவர் கணவர் மீட்டுவிட்டார். நகையை அடகு வைத்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்க முடியுமா என்றால் முடியும். அந்த நகைக்கு மாதம் வட்டி 80 பைசாவில் இருந்து 1.20 பைசா வரை இருக்கும் என்றால் சரிதான். நானே நகையை வட்டிக்கு அடகு வைத்து பணம் கொடுக்கும் நிலையில் எவ்வாறு ராகவிக்கு வட்டி வாங்காமல் பணத்தை கொடுத்தேன் என்றால் அவரது அண்ணன் எதிரியும் அவரடன் சேர்ந்து தொழில் செய்யப்போவதாக சொன்னார் அதனால் கொடுத்தேன். கடனுறுதி சீட்டில் பெயர்,முகவரி எழுதி தான் கையொப்பம் போட்டு கொடுத்துள்ளார்.

5. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு No Such Person என திரும்பி வந்துவிட்டது என்றால் சரிதான். நீதிமன்றத்தின் மூலம் சென்ற அழைப்பாணையில் No Such Person என்று திருப்பி வந்துவிட்டது என்றால் சரிதான். மீண்டும் வேறு முகவரி அனுப்பிய அழைப்பாணை தான் எதிரிக்கு சார்பு செய்யப்பட்டது என்றாலும் அந்த அறிவிப்பில் எதிரியின் தொலைப்பேசி என்னை குறிப்பிட்டு அனுப்பியிருந்தேன் என்றாலும் சரிதான். எதிரியின் தொலைப்பேசி எண் மூலம் தொடர்பு கொண்டு தான் அவருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் எதிரியின் ஆதார் அட்டையின் நகல் வாங்கினேன் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. காசோலையில் தேதியை நான் தான் நிரப்பினேன் என்றால் எதிரி போட சொன்ன தேதியை போட்டேன்.

6. காசோலையில் தொகை பெயர் ஆகியவை ஒரு மையாலும், கையொப்பம் வேறொரு மையாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் கையொப்பம் எதிரி போட்டார், மற்றதை அவர் அண்ணன் எழுதினார். இந்த வழக்கில் எதிரிதான் காசோலையை நிரப்பி கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சதீஷ் என்பவர் என்னுடைய நண்பர் அன்புச்செல்வன் என்ற ரஜினியிடம் கொடுத்த காசோலையை பயன்படுத்திதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதுகுறித்து அன்புச்செல்வன் என்பவர் மீது ஆவடி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் குறிப்பிடும் தேதியில் ரூ.10 லட்சத்தை எதிரிக்கு கடனாக கொடுக்கவில்லை என்றாலும், நான் வழக்கு காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.